Kasi Mutt Free Publication

உ

Siva Siva

TIRUVEMBAVAI
AND
TIRUPALLIYEZHUCHI

of

MANICKAVACHAKAR

(Tamil Text with English Translation of Dr. G. U. Pope)

Published
according to the orders of
His Holiness
Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal,
Kasi Mutt, Tirupanandal, Tanjore District.
Kumaraswami Mutt, Kedar Ghat, Benares.

Edited by:
Sri K. SUBRAMANIYA IYER, B. A.,
(Thiyagaraja Vilas, Triplicane, Madras—5.)

1956

உ
சிவசிவ

திருவெம்பாவை உண்மை

"மலவிருளுற்று உறங்காமல் மன்னுபரி பாகர்அருள்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை"

திருப்பள்ளியெழுச்சி உண்மை

"ஏர்மருவு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்(டு)
ஆர்வமுடன் ஆண்டவரற்(கு) அன்புசெயும் இயல்பே"

—திருப்பெருந்துறைப் புராணம்

குறிப்பு

சிவசத்தியைப் புகழ்ந்து பாராட்டிய திருவெம்பாவை இருபது பாசுரங்களையும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் திருவண்ணுமலையில் மெய்யன்பர்கள் ஓதிப் பயன் அடையும் பொருட்டுச் சலவைக் கற்களின்மீது பொன்னெழுத்துக்களால் பொறிக்கச்செய்து உண்ணுமுலையம்மை ஆலயத்துள் பராசத்தியம்மை சந்நிதியின் வடபக்கத்து மேற்சுவரில் பதிப்பித்துள்ளார்கள்.

இது சென்னை கவர்னர் **மேன்மைதங்கிய ஸ்ரீபிரகாசா அவர்களால்** 3—12—53ல் திறக்கப்பெற்றுள்ளது.

வாழ்க எம் தலைவரின் பொன்னுர் திருவடிகள்!

This book can be obtained free of cost from "**Thiyagaraja Vilas, Triplicane, Madras-5**" by sending two annas stamp to cover postage.

உ
Siva Siva

PREFACE

Tiruvembavai (the maidens' song of the dawning) and Tirupalliyezhuchi (morning hymn in the temple) are the 7th and 20th hymns in Tiruvachakam the "holy word" of St. Manicka Vachakar. Tiruvembavai consists 20 stanzas which are sung in Siva shrines at the dawn of the day in the month of Margazhi (December) for ten days preceding the Tiruvadhirai day. Tirupalliyezhuchi is sung daily at dawn. The Saivites are aware that during the Tiruvadhirai festival Tiruvembavai alone used to be sung and that the other Thevara hymns would not be sung, and this custom has been in vogue from time immemorial.

Students of South Indian history do know that the Chola monarchs made provisions in many Siva shrines for singing of Thevara hymns daily in those temples. From the reign of Paranthaka I "there is regular series of endowments recorded in epigraphs of the Chola and Tondai countries for the recitation of Thevara hymns in temples to the accompaniment of musical instruments." It will be very interesting to note that provision for recitation of Tiruvembavai or Tirupalliyezhuchi alone were also made occasionally and the following extracts from epigraphical reports bear testimony:

1. Rajendra II, year 5, Kilur (S. A.) Sale of land to the temple of Tirukkovalur tax free by *ur* of Pudupperur as provision for recitation of ***Tiruvembavai*** on Margazhi Tiruvadhirai days and for offerings and prasadams to persons specified.

2. Virarajendra, Tiruvotriyur (Ch) Reclamation of 60 veli of waste land in Singavishnu catm, by order of the king .... Paddy, Gold and Kasu were appopriated to various items of expenditure including (a) the pay of two priests and a musician for ***Palliyezhuchi*** (b) Tiruvadhirai Thirunal including recitation of ***Tiruvembavai*** ....

3. Rajadhiraja II, year 5, Valuvur (Tanjore) Thirty Kasu endowed (interest being $11\frac{1}{4}$ Kasu p. a.) for recitation of ***Tiruvembavai*** before the image of Tiruvadavurali Nayanar in the temple on Margazhi Tiruvadhirai day and also for maintaining the festival of Panguni.

4. Vikramachola, year 14, ***Tiruchatturai*** (Tanjore) Land for ***Tirupalliyezhuchi*** by nagarathar living in the street called Vikramachola perumderu at Ayirattali alias Ven Kanda Chola puram.

From the above few instances it may be clear that the recitation of Tiruvembavai and Tirupalliyezhuchi was also very popular and that "Tiruvachakam exercised considerable influence on posterity."

The Tamil text of Tiruvembavai and Tirupalliyezhuchi with the English translation of Dr.G.U.Pope

are now published and issued free of cost to the Tamil and English knowing public to have a peep into the heart melting strains of Manickvachakar.

This booklet is published by Sri. K. Subramania Iyer, B. A. the grandson of Mahamahopadyaya Dr. U. V. Saminatha Iyer. Sri. K. Subramania Iyer, is following the footsteps of his grandfather, and faithfully and honestly he is reprinting the works published by Dr. Iyer. Sri. K. Subramania Iyer's integrity, faithfulness and sense of duty are well known and I am much pleased to see that Sri. K. Subramania Iyer has spared time to publish these two hymns from Tiruvachakam. May Senthilandavan shower his choicest blessings on him!

The great munificence of His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, head of Sri Kasi Mutt, Tirupanandal has brought forth many Tamil publications with English and Hindi translations, and Neethinerivilakkam, Kandar Kalivenba, Sakalakalavallimalai and Sivagnana Siddhiar had been published with such translations by Sri S. Kalyanasundara Iyer, the father of Sri K. Subramania Iyer, according to the wish of His Holiness Srilasri Kasivasi Swamigal Avergal.

Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal who belongs to the galaxy of seers coming in the line of **Sri Kumaragurupara Swamigal** had laid the spiritual world under a very deep debt of gratitude by this and similar undertakings. The only

way in which the public can repay the generous efforts of His Holiness is to fully benefit by them and attain a spiritual progress and enlightenment.

போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர்!
போற்றியருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்!

Be gracious Thou, to Thy foot's flower be praise!
Be gracious-To Thy rosy beauteous feet, be praise!

K. V. S. S. Kalloori,
Tirupanandal,
18—12—1956.

K. M. VENKATARAMIAH,
M. A., B. O. L.,
Principal.

Siva Siva

EDITOR'S NOTE

On 5—4—1954 His Holiness Kasivasi Swamiji released the publication entitled "**Tiruvachaka Pazhamozhigal**" with Dr. G. U. Pope's translation. His Holiness has now been graciously pleased to order the publication of 'Tiruvempavai and Tirupalliyezhuchi' with the English Translation from the beautiful pen of Dr. G. U. Pope. The book is released free of cost as per orders of His Holiness on "Margazhi Tiruvadhirai" day this year.

Sri Vidwan K. M. Venkataramiah Avl., M. A., has been mainly responsible for the editorial work in this publication and I am highly thankful to him for the successful completion of this valuable edition.

In this connection I take pleasure in announcing the fact that St. Manickavachakar's 'Tiruvempavai' has been inscribed in marble tablets and exhibited in Tiruvannamalai Temple for the benefit of all devotees by His Holiness Srilasri Kasivasi Swamiji.

I am greatly indebted to His Holiness for directing me to publish this Holy book under the Kasi Mutt publication series. During the last decade, more than 60 valuable publications devoted to Saivism have been printed and released by Kasi Mutt, Tirupanandal, under the directions of His Holiness who is doing everything in the name of Lord Siva. In fact he is ever at "Lord Siva's Service". The Saivite world is greatly proud in having him as a spiritual soul who takes immense pleasure in glorifying the names of all Saiva Saints—"Tiruthondars" and bidding every one to sing saintly hymns on Lord Siva. May Lord Siva bless us all and guide us into the path of righteousness through the golden deeds of this great spiritual soul.

Madras-5
18—12—'56.

K. SUBRAHMANYAM, B. A.

சிவசிவ

மாணிக்கவாசக சுவாமிகள்

மாணிக்கவாசக சுவாமிகள் மதுரைக்கருகிலுள்ள திருவாதவூரில் அவதரித்தார். இளமையில் கல்வியறிவு பெற்று நல்லொழுக்கின் தலைநின்றார். அரிமர்த்தன பாண்டியனால் முதல் அமைச்சரானார். அரசன் ஆணையால் கீழக் கடற்கரைக்குக் குதிரை வாங்கச் சென்றார். திருப்பெருந்துறையில் குருமூர்த்தியாக எழுந்தருளி வந்த இறைவனிடம் ஞானோபதேசமும் மாணிக்கவாசகர் என்ற திருநாமமும் பெற்றார். இறைபணியில் நின்றார். பின்பு அரசனின் கோபத்திற்கு இலக்கானார். நரிகள் பரிகளானதையும், வைகை பெருகியதையும், இறைவன் பிரம்படி பட்டதையும் கண்ட பாண்டியன் வாதவூரரின் பெருமையை உணர்ந்து மன்னிப்பு வேண்டினான். வாதவூரர் அரசியலைத் துறந்து திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருவாரூர், திருவண்ணமலை முதலிய சிவத்தலங்களை வணங்கிப் பதிகம்பாடி இறுதியில் தில்லை வந்தடைந்தார்; தம்மிடம் வாதுக்கு வந்த புத்தர்களை வென்றார்.

ஒருநாள் நடராஜப்பெருமான் அந்தண வடிவுகொண்டு மாணிக்கவாசகரிடம் வந்து **திருவாசகம், திருக்கோவையார்** இரண்டினையும் தாமே எழுதிக் கைச்சாத்திட்டுக் கனகசபையில் வைத்து மறைந்தருளினார். மாணிக்கவாசகர் ஆனி மகத்தில் இறைவனோடு இரண்டறக் கலந்தார். இவர் காலம் கி. பி. 3-ம் நூற்றாண்டு என்று ஒருசில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை வரலாறு

சிவபெருமான் துதி

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
　　உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
　　இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு
　　ளைப்புரி யாய்;பொன் னம்பலத்தெம்
முடியா முதலே! என்கருத்து
　　முடியும் வண்ணம் முன்னின்றே.

—**திருவாசகம்**

திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது 'அறிவாற் சிவனே' எனப் போற்றப்பெற்ற மாணிக்கவாசக சுவாமிகளின் மணிமொழிகளாகிய திருவாசக நூலின்கண் உள்ளதோர் பதிகம். இஃது இறைவனது அருட் சத்தியின் செயலைக் கூறும் இருபது பாட்டுக்களை உடையது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் **எம்பாவாய்** என்று கொண்டு முடிவதால், இது **திருவெம்பாவை** எனப் பெயர்பெற்றது. **திரு** என்பது தெய்வத்தன்மை என்ற பொருள் கொண்ட மங்கல அடைமொழி. திருவெம்பாவையைப் **பாவைப்பாட்டு** என்றும், நான்கடியின் மிக்குப் பத்தடி வரையும் வரும் **கொச்சகம்** என்றும் பேராசிரியர் கூறுவர்; ஆதலால், இத் திருவெம்பாவை எட்டடியான் வந்த **கொச்சகக் கலிப்பா** ஆகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலையை அடைந்து அண்ணுமலையாரையும் உண்ணுமுலையம்மையையும் வழிபட்டு அங்கே தங்கியிருந்தபொழுது மார்கழித் திங்கள் வந்தது. அப்பொழுது திருமணம் செய்யப்பெருத கன்னிப் பெண்கள் (5 வயதுமுதல் 12 வயதுவரையுள்ள பெண்கள்) பலர் திருவாதிரைக்குப் பத்துநாள் முன் தொடங்கி விடியற்காலத்தில் நித்திரையைவிட்டு எழுந்து ஒருத்தியும் பலருமாகத் தங்களை யொத்த கன்னிப்பெண்கள் கண்துயிலும் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் அவர்களை விளித்துத் துயிலுணர்த்தி எழுப்பியதையும், அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிச் சிவ பெருமானின் அருட்செயலைப் பாடிக்கொண்டு தாமரைத் தடாகத்திற்குச் சென்று நீராடியதையும், அங்குக் கௌரி யாகிய உமாதேவியாரின் திருவுருவைத் தூய மணலால் அமைத்துப் பூசித்து வழிபட்டதையும் அவர் நேரிற்கண்டு, அப்பெண்கள் கூற்ருகப் பாடியருளியது இத் **திருவெம்பாவை** ஆகும்.

பாவை நோன்பு

பண்டைக் காலத்தில் நம் தமிழ்நாட்டில் சைவ வைணவக் கன்னிப் பெண்கள், நாடு செழித்தோங்க மழைவளம் பெறுதலாகிய பொதுப் பயனைக் குறித்தும், நல்வாழ்க்கை அடையும் பொருட்டுச் சிறந்த கணவரைப் பெறுதலாகிய சிறப்புப் பயனைக் குறித்தும் மார்கழிமாதத்துத் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன்தொடங்கி விடியற்காலையில் நீராடிக் கௌரி யம்மையின் திருவுருவைத் தூய மணலால் தாபித்துப் பூசித்து வழிபட்டு நோன்பு மேற்கொண்டனர். அதனுல் அந் நோன்பு **பாவை நோன்பு** எனப்படும். (பாவை - கௌரியுருவமாக மணலால் அமைக்கப்பெற்ற தெய்வப் படிவம்.)

இந்நோன்பு நோற்கும் பெண்கள் வெறுஞ்சோற்றை உண்பதேயன்றி, உணவுடன் நெய், பால் முதலியவற்றைச் சேர்த்துண்ணுர்; தங்களை அலங்கரித்துக் கொள்ளார்; தீய செயல்களில் ஈடுபடார்; தம்மால் இயன்றவரையில் தான தருமங்களைச் செய்து மகிழ்வர்.

பாவை நோன்பு **மார்கழி நீராடல்** எனவும் பெயர் பெறும். நற்றிணை, கலித்தொகை, பரிபாடல் முதலிய சங்க நூல்கள் கன்னிப் பெண்களின் **தைந்நீராடலைப்** பற்றிக் கூறுகின்றன. அது மார்கழித் திருவாதிரையிலிருந்து ஆரம்பித்து நடைபெறுவதாகும்.

திருவெம்பாவைத் தத்துவக் கருத்து

ஒவ்வொருநாள் இரவும் சிவசத்தி உலகத்தை அழிக்கும் காலத்தையும், ஒவ்வொருநாட் பகலும் சிவசத்தி உலகத்தைப் படைத்துக்காக்கும் காலத்தையும், விடியற்காலமாகிய ஐந்து நாழிகைக் காலம் சிவசத்தி உலகத்தை மீளப் படைக்கத் தொடங்கும் காலத்தையும் குறிக்கும்.

தைத் திங்கள் முதல் ஆனித் திங்கள் வரை கணக்கிடும் உத்தராயணகாலம் தேவர்களுக்குப் பகலாகும்; ஆடித் திங்கள் முதல் மார்கழித் திங்கள் வரை கணக்கிடும் தக்ஷிணாயணகாலம் இரவாகும். மார்கழித் திங்கள் முழுவதும் தேவர்களின் இரவுக்காலத்தில் ஆறில் ஒரு பகுதியான விடியற்காலம் ஆகும். இதில் நடராசப் பெருமான் சிறப்பாக ஆனந்தத் தாண்டவம் புரிகின்ற **திருவாதிரைநாளும் அதற்குமுன் ஒன்பது நாட்களும்** மிக விசேடமாகும். ஆதலால், அழிக்கப்பட்ட உலகத்தை மீளப் படைக்கத் தொடங்கும் சிவசத்தியின் அருட்செயலைத் திருவெம்பாவைப் பதிகம் கூறுவதாகும்.

இக்கருத்தை உட்கொண்டுதான் திருவெம்பாவை **'சத்தியை வியந்தது'** என்று கூறப்பெற்றுள்ளது. இதனை, ஒவ்வொரு பாடலிலும் சிவபெருமானின் திருவடிப்புகழ்ச்சியின் (சிவசத்தியின்) பெருமையினைக் கூறுவதால் அறியலாகும்.

திருவெம்பாவையில் முதல் எட்டுத் திருப்பாட்டுக்கள் வரை ஒவ்வொரு திருப்பாட்டிலும் ஒவ்வொரு பெண்ணே எழுப்பப்பட்டனர். அவ்வெண்மரோடு முதலில் எழுப்பிய ஒரு பெண்ணையுஞ்சேர்த்து ஒன்பதின்மர் ஆவர். இவ்வொன்

பதின்மரும் முறையே **மனோன்மனி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டை, வாமை** என்னும் நவசத்திகளாகும். இந்த நவசத்திகளும் உலகப் படைப்பின் பொருட்டு முன்னவள் பின்னவளைச் செயற் படுத்திய குறிப்பே முதல் எட்டுத் திருப்பாட்டுக்களில் கூறப் பெற்றுள்ளது. ஒன்பதாவது திருப்பாட்டிலிருந்து இருப தாவது திருப்பாட்டு முடியப் பன்னிரண்டு திருப்பாட்டுக் களும் நவசத்திகளும் ஒன்றுசேர்ந்து சிவபெருமானை நோக்கிப் புகழ்ந்து துதிப்பதாக அமையப்பெற்றுள்ளன.

நவசத்திகளும் மேற்கூறியவாறு ஒருவரை ஒருவர் செயற் படுத்தி யுணர்த்த உலகைப் படைத்தல் முதலிய ஐந்தொழில் களும் நடைபெறுதற்குச் சிவபெருமானே முதன்மையான தலைவர் ஆவர். இக்கருத்தையே திருநாவுக்கரசு சுவாமிகள் தம் தேவாரத்துள் "ஆட்சி உலகை உடையாய் போற்றி" என்றும், "உலகை நடுங்காமற் காப்பார் தாமே" என்றும் "கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி" என்றும் கூறி யருளினார்.

இத்தகைய சிறப்புக்களையுடைய **திருவெம்பாவையும் திருப் பள்ளியெழுச்சியும்** ஆங்கில மொழிபெயர்ப்புடன் துன்முகி மார்கழித் திருவாதிரை வெளியீடாக வருகின்றது. இதனை வெளியிடச்செய்த ஸ்ரீ காசிமடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்களுக்கு மிக நன்றி.

இவ்விரு பகுதிகளுக்கும் குறிப்புரை எழுதியவர் **திருமுறைக் கலைஞர்** திருச்சி வித்துவான் **திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர் களுக்குச் செந்திலாண்டவன் திருவருள் மல்குக.

இங்ஙனம்,

சென்னை
18—12—56

க. சுப்பிரமணியம்

தென்றில்லை மன்றினுள் ஆடி போற்றி !

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவண்ணாமலையில் அருளிய

திருவெம்பாவை

[சத்தியை வியந்தது]*

தரவிணைக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
 சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
 மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
 போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு)இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்;என் னே!என்னே!
 ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

THE MAIDENS' SONG OF THE DAWNING

THE TEMPLE - WORSHIP

[THE WAITS SING AT THE DOOR]

The Splendour rare and great, that knows nor first nor end,
 we sing; Thou hear'st the song, yet still sleep'st on;
O lady of the large bright eye! is thine ear dull
 that it perceives not sound of praise that hails
The great God's cinctured feet?—She hears the strain
 through all the street, yet in forgetful sleep [resound
On her flower-couch she muttering turns!—
See, here she nothing noting lies! Why thus, why thus?
 doth this our friend beseem?–Our Lady fair, arise! 1

* சத்தி-இங்குப் பராசத்தியாகிய உமாதேவியார்; திருவடியுமாம். வியந்தது-புகழ்ந்து பாராட்டிக் கூறியது. இங்குப் பத்தியின் விளை

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
　　பேசும்போ தெப்போ(து)இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்!
　　சீசி! இவையுஞ் சிலவோ? விளையாடி
ஏசும் இடமீதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
　　கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
　　ஈசனார்க் கன்பார்?யாம் ஆரேலோர் எம்பாவாய்!

Trifle not!

'Hail to the heavenly Light', thou ever say'st, as we,
　by night and day. Now of this flowery couch
Art thou enamour'd, maid with faultless gems adorned?
　Shame! jewell'd dames, are these things trifles too?
To sport and jest is this the place, when He in grace
　Hath come to give the foot-flower, shame-fast
　　　　　　　　　　　　　　　angels praise?
The Teacher, Lord of Siva-world, in Tillai's porch
　　　　　　　　　　　　　　　He rules.
　Who are His lovers all?—Our Lady fair, arise![*] 2

---

[*] The refrain is *el embavay!* which *may* mean 'Arise (or ponder) O our Lady!' but seems like Scott's *elen loro*! in Marmion.

விற்குத் துணை புரியும் உமாதேவியின் பேருபகாரச் செயலைப் பாராட்டியதாம் என்பது கருத்து.

1. வாள் தடம் கண்-ஒளிபொருந்திய அகன்ற கண்கள். வளருதியோ-கண்வளருதியோ-துயில்கின்றாயோ. வன்செவியோ-செவிட்டுச் செவிகளோ. வார்கழல்கள்-நீண்ட வீரக்கழல் அணிந்த திருவடிகள்; இங்குத் திருவடி சிவசத்தியைக் குறிக்கும். விம்மி விம்மி-(பத்தி மேலீட்டால்) தேம்பித் தேம்பி அழுது. மெய்ம்மறந்து-தன்வயம் இழந்து. போதார் அமளி-பூக்கள் நிறைந்த படுக்கை. ஏதேனும் ஆகாள் கிடந்தாள்-வேறு எச்செயலுக்கும் பயன்படாமல் (மூர்ச்சித்துக்) கிடந்தாள். ஈதே-(விழித்தெழாதிருக்கும்) இந்நிலையோ. பரிசு-(நின்) தன்மை. ஏல் ஓர் எம்பாவாய்-எம்முடைய பாவைபோன்ற பெண்ணே (யாம் சொல்வதை) ஏற்றுக்கொண்டு (அதன் பொருளை)

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந் தெதிர்எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய் !
பத்துடையீர் ! ஈசன் பழவடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ?
எத்தோ?நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் !

O thou whose smile as pearl is bright, arise, present
thyself before the Sire, the blissful One, th' Ambrosial,
And with o'erflowing sweetness speak! Come, ope thy
doors!
—[She joins them. They enter the temple-porch.]
'Ye men devout, the Ruler's ancient saints, ye
reverend men,
Will't be amiss if ye our weakness aid, us novices admit?'
[In the temple]
No cheat is this, know we not all Thy wondrous love?
Who sing not what they beauty deem? Our Sivan's form
ev'n so we yearn to see.—Our Lady fair, arise! 3

ஆராய்ந்து பார். ஏலோர் எம்பாவாய் - இஃது இப் பாசுரத்தின் மகுடம் என்பாருமுளர். ஏல் ஓர் என்பதை ஒரு சிலர் அசை என்றும் கூறுவர்.

2. பாசம் - அன்பு - பேரன்பு. பரஞ்சோதிக்கு-மேலாகிய ஒளிப் பிழம்பாகவுள்ள இறைவன் பொருட்டு. நேரிழையாய் - தகுதியான ஆபரணங்களையுடைய பெண்ணே. சிவபெருமான் திருவடிகளைப் புகழ்ந்து பாராட்டுவதற்கு ஏற்ற நல்வினைப் பயன் தங்களுக்கின்மையால் தேவர்கள் கூசுகின்றார்கள் என்பார். "விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்ப்பாதம்" என்பது அருமை நோக்கியும், "தந்தருள வந்தருளும்" என்பது எளிமை நோக்கியும் நின்றது. பாதம் - சிவசத்தியுமாம். தேசன் - ஒளிவுருவானவன்; ஞானாசிரியனுமாம். அன்பு ஆர் - (நமது) அன்பு எத்தன்மையுடையது; அன்பு நிறைந்த எனினுமாம். யாம்ஆர்-நாம் யார் (அடிமைகள் அல்லவோ)?

3. நகை - பல். அத்தன் - தந்தை: இங்கு அன்னையோடு கூடிய அத்தன் என்பதாம்; "அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வண

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம்: அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே!
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்!

[They all henceforth sing their morning song to the Goddess, imploring *Her* to arise in grace.]

O thou of radiant pearl-like smile, is't not now dawn?
have not the sweet-voiced come, like parrots many-hued?
Thus thinking, as is meet, we speak; meanwhile in sleep
close not Thine eye; let not Thy time in vain be spent!—
Sole Balm of heaven, the Veda's precious Sense, the Dear
to eyes that see, we sing, our melting minds
In rapture all dissolved; nor deem thou should'st remain
for ever thus asleep!—Our Lady fair, arise! 4

நீயலையோ" என்பது தேவாரம். அமுதன் - அமுதம் போன்றவன்; அழிவற்றவனுமாம், அள்ளூறி - வாயூறி, கடை - (படுக்கையறையின்) வாயிலை. பத்து - பற்று; அன்பு, பத்தி. பத்துடையீர் - பேரன்புடையீர்; அடியார் இலக்கணம் பத்தும் உடையீர் எனினுமாம். பாங்கு - மிக்க உரிமை, தோழமை, மேன்மை. புத்தடியோம் - புதிய தொண்டுடையோம், சித்தம் அழகியார் - தூய நன்மனமுடையார். எத்தோ - ஏமாற்றமா?

4. ஒண் - ஒளி. நித்திலம் - முத்து. புலர்ந்தின்றோ - விடியவில்லையா. வண்ணம் - அழகு; நிறம். கொடு - கொண்டு. உள்ளவா - உள்ளவாறு. துயின்று - துயில்வித்து. அவம் - வீண். மருந்து - அமுதம். வேதம் - வேதாகமங்களில் (சிறப்பித்துக் கூறும்). விழுப்பொருள் - மேலான பொருள்; இறைவன். கண்ணுக்கு - (காண்பார்கள்) கண்களுக்கு: கண், அகக்கண்ணும் புறக்கண்ணுமாம். இறைவன் திருவுருவத்தை அகக்கண்ணால் காணுதலே மிகச்சிறப்புடையது;

மாலறியா நான்முகனும் காணா மலையினை "நாம்
போலறிவோம்" என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்;
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் "சிவனே! சிவனே!" என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்!
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

Say not, 'Sivan is unknowable!'

The 'Mount' that Mal knew not, and Ayan saw not,—we
can know; so Thou dost utter falsities,
O guileful one, whose mouth with milk and honey flows,
ope thy door! He Whom earth, heaven, and other
realms know not,
In glory makes us His, cleanses our souls in grace.
His goodness sing! 'O Sivan, Sivan,' hark! they cry.
Thou understandest not; thou understandest not!—
So's she with perfumed locks!—Our Lady fair, arise! 5

"முகத்திற் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள். அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" என்பது திருமந்திரம். நெக்கு - நெகிழ்ந்து; கனிந்து. எண்ணிக் குறையில் - கணக்கிட்டு எண்ணிக் குறைவு காணப்படுமானால் (மீண்டும்போய்).

5. மாலறியா நான்முகனுங் காணா மலை - இது திருவண்ணாமலையைப் பற்றிய வரலாறு. பொக்கங்கள் - பொய்கள். படிறீ - வஞ்சகி. கடை - கடைவாயிலை. ஞாலம் - பூலோகத்திலுள்ளவர்கள். பிற - பிறவுலகத்திலுள்ளவர்கள். கோலம் - திருவுருவம். கோதாட்டும் - சீராட்டிப் புகழும். கோது - குற்றம், அதனைப் பாராட்டாமை. சீலம் - அருட்குணம். ஓலம் - இஃது அபயம் வேண்டிக்கூவும் குறிப்புமொழி. முதல், உணராய் - அறிந்திலை. இரண்டாவது, உணராய் - துயில் நீத்து எழுந்தாயில்லை. ஏலம் - மயிர்ச்சாந்து. போல், காண்: அசைகள். ஞாலமே, விண்ணே, பிறவே என்பதில் ஏ: எண்ணிடைச்சொல்.

மானே ! நீ நென்னலை " நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் " என்றலும் நாணாமே
போன திசைபகராய் ; இன்னம் புலர்ந்தின்றோ ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய் !
ஊனே உருகாய் உனக்கே உறும் ;எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் !

O fawn, but yesterday thou said'st, ' At dawn I come
to rouse you up ; ' but now, all unabashed
Tell us, what quarter didst thou seek ?—is't not yet dawn ?
He Who is sky, and earth, and all things else, to men unknown ;
Himself will come, will guard, and make us His ; to us
who coming sing His heavenly cinctur'd Foot, speak thou !
In rapture melt ! The King of thee, of us extol ;
of all the worlds !—Our Lady fair, arise ! 6

---

6. மானே - மருண்ட நோக்கத்தால் மான் போன்ற பெண்ணே. நென்னல் - நேற்று. ஐ: சாரியை. பகராய் - சொல்லுவாயாக, புலர்ந்தின்றோ - விடியவில்லையா. தலையளித்து - கருணைபுரிந்து. வான் - மேன்மை, அழகு. கழல் - இங்குச் சிவசத்தியுமாம். திறவாய் - திறவாமலிருக்கின்றாய், ஊன் - உடல் ; ஆகுபெயர். இறைவனை மனம் நினைந்து உருகுங்கால் உடலும் குழைந்து உருகும் என்பதை, "புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென். என்பெலா முருக்கி" எனவரும் பிடித்தபத்து அடிகளால் அறியலாம். உறும் - பொருந்தும். தங்கோன்-தலைவன். இங்கு, 'வான்வார் கழல் பாடி' என்றது திருவடியினைக் குறிக்கும் 'சத்தியை வியந்தது' என்பதைக் குறிப்பிக்கும்.

அன்னே ! இவையுஞ் சிலவோ ? பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் "சிவன்"என்றே வாய்திறப்பாய் ;
"தென்னா"என் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய் ;
"என்னானை என்அரையன் இன்னமுது"என் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய்; இன்னந் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் !

Mother, are these too trifles? Many heavenly ones
know not, the One, the mighty glorious Lord
Hearing His signals, ope thy mouth, and 'Sivan' cry,
Cry 'Southern-One'. Like wax before the fire
Melting,—'My own, my King, Ambrosia', we all
have sung! Hear thou! apart from us yet dost thou sleep?
Dost thou yet speechless lie, like the hard-hearted silly ones?
What grace is in this sleep?—Our Lady fair, arise! 7

---

7. அன்னே - தாயே. உன்னற்கு - நினைத்து அடைதற்கு. ஒருவன் - ஒப்பில்லாதவன் ; இறைவன். சின்னங்கள் - சங்கு, எக்காளம் முதலிய விடியற்கால மங்கல இசைக்கருவிகள். சிவனென்றே - சிவ சிவ என்னும் மகா மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே. தென்னா - தென் பாண்டி நாட்டவனே ; அழகுடையவனே எனினுமாம். சிவபெருமான் எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆதலால், பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த சிறப்பு நோக்கி, அவனைத் தென்னாடுடைய சிவன் எனக் கூறியது ஆகும். தீசேர் மெழுகொத்தல் - இது தன் தன்மை கெடல். என் ஆனை - எனக்கு யானை போன்றவன் ; மகளிர் தம்மைப் பிடி என்று கருதியதற்கு ஏற்ப இறைவனை 'ஆனை' என்றார். எனக்குத் தந்தை எனினுமாம். (ஆன் : சாரியை. ஐ - தந்தை). வாளா - சும்மா.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும் ;
    ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும் ;
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
    கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் ; கேட்டிலையோ ?
வாழி !ஈ தென்ன உறக்கமோ ? வாய்திறவாய் !
    ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
    ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் !

While cocks are crowing, small birds chaunt on every side ;
  while trumpet sounds, sound out the conch-shells everywhere ;
The heav'nly Light without compare, the Grace without compare,—
  the Being great without compare, we've sung ; hear'st not ?
Bless thee, what slumbers this ? Thou openest not thy mouth ?
  is such the recompense for our King's love we bring ?
Th' Eternal, First of Beings ; Him Who 'bides the Only-One ;
  the Lady's Partner sing we all !—Our Lady fair, arise! 8

---

8. கோழி - சேவல். சிலம்ப - கூவ. குருகு - நாரை; பறவைப் பொதுவுமாம். ஏழில் - ஏழிசைகளுக்கு இடனாகிய ஏழு துளைகளையுடைய நாகசுரம் என்னும் துளைக்கருவி ; (ஏழிசை : ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு இசை.) கேழில் - ஈடும் எடுப்பும் இல்லாத; ஒப்பற்ற. விழுப்பொருள்கள்-இங்குச் சிறந்த பொருளமைந்த புகழ்ப்பாடல்களைக் குறிக்கும். இது 'பொருள்சேர் புகழ்' ஆகும். வாழி - வாழ்வாயாக. வாய் - வாய்; வாயிலுமாம். ஆழியான் - அருட்கடலாகிய சிவபெருமான். ஏழை பங்காளன் - உமையொரு பாகன் ; அர்த்தநாரீசுரன்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எங்கணவர் ஆவார் ; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் ;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய் !

Ancient of days, existing ere the ancient world!
Whose nature shares the newness of created things!
Thy worshippers devout, who've gained Thee for their Lord,
adore Thy servants' feet,—to them give reverence due.-
And these alone shall be our wedded lords ; joyous
ev'n as they bid, due service will we render meek.
Thus, if Thou grant to us this boon, our King, no lack
Thy handmaids e'er shall know !—Our Lady fair, arise! 9

---

9. முன்னைப் பழம் பொருட்கும் - முற்பட்டனவாகிய பழைய பொருள்கள் எல்லாவற்றிற்கும். பின்னை - பிற்பட்டனவாகிய. புதுமைக்கும் - புதிய பொருள்கள் எல்லாவற்றிற்கும். பேர்த்தும் அப்பெற்றியனே-மீண்டும் புதுமையாகத்தோன்றும் இன்பத்தைத் தரும் தன்மையனே. அப்பெற்றி - அந்தத் தன்மை; புதுமை : பெற்றியன் - புதுத் தன்மையுடையவன், பிரான் - தலைவன். சிறந்த மெய்யடியாரை வணங்கும் பேறே இறை வணக்கத்தின் பயன் என்பார், "உன்னடியார் தாள் பணிவோம்" என்றார். "வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன் காண்பார் போல், மெய் வேடர் பெருமானைக்கண்டு வீழ்ந்தார்" என்பது பெரிய புராணம். பாங்கு - உரிமை. தொழும்பு - கடமையாக மேற்கொள்ளும் அடிமைத் தன்மை. நல்குதியேல் - அருள்புரிவையாயின். என்ன - எத்தகைய.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்;
    போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால்; திருமேனி ஒன்றல்லன்;
    வேதமுதல்; விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்;
    கோதில் குலத்தரன்றன் கோயிற்பி ணாப்பிள்ளைகாள்!
ஏதவன்ஊர்? ஏதவன்பேர்? ஆர்உற்றார்? ஆர்அயலார்?
    ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!

Beneath the sevenfold gulf, transcending speech, His
foot-flower rests;
  with flowers adorned His crown of all the universe
is crown!
The Lady's at His side !–His sacred form dwells not alone!
  The Vedam, heavenly ones, and earth, praise Him;
and yet
He's our one Friend, Whose praise ne'er dies; within
His saints He dwells
  pure He sustains the 'clan'; ye temple-ladies, say
What is His Town? His Name? His Kin? and who
His foes?
  And how sing we His praise?—Our Lady fair, arise! 10

---

10. பாதாளம் ஏழினுங்கீழ்......எல்லாப் பொருள் முடிவே - இது திருமாலும் பிரமனும் தனித்தனியே யாம் பிரமம் என்று செருக்குற்ற காலை அவர்களுக்கு அப்பாலும் ஓங்கி நின்ற இறைவனின் அடிமுடிகளைக் குறிப்பது. சொற்கழிவு - சொல்லில் அடங்காத நிலை. சொற்கழிவு பாதமலராகவும், பொருள் முடிவு திருமுடியாகவும் இங்குக் குறிப்பிட்டமை காண்க. பேதை - உமாதேவியார். இறைவன் திருமேனி ஆணுரு அல்லது பெண்ணுரு என்னும் இரண்டனுள் ஒன்றாக அமையாமையால், "திருமேனி யொன்றல்லன்" என்றார். "ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன்றலவ் வுருவையிஃ தொருத்தன்என்கோ ஒருத்தி என்கோ, இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றோர் இயற்செல் இல தெனின் யான்மற் றென்சொல் கேனே" என்பது சிதம்பரச்செய்யுட்கோவை. வேதமுதல் - பிரணவம், ஓத உலவா - புகழ்ந்து கூறமுடியாத. உளன் -

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழி அடியோம் வாழ்ந்தோங்காண்! ஆரழல்போற்
செய்யா! வெண் ணீருடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்;
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்!

[IN THE TEMPLE - TANK]

Entering the broad, frequented tank with joyful cries,
and hands outstretched, we plunge and plunge, and sing Thy Foot,
O Guru, see, Thy faithful worshippers are blest! As fire
Thy hue is red; Thou wear'st white ashes; Blessed One!
Thou Bridegroom of the Lady lithe, with broad, black eyes!
O Guru, make us Thine in grace. In this our sport,
What those who would be saved perform, we've done, as they;
guard that we weary not!—Our Lady fair, arise! 11

உள்ளத்திலிருப்பவன். குலத்து - மேன்மையையுடைய. குலத்துப் பிணைப்பிள்ளைஎனக் கூட்டுக. பிணைப் பிள்ளை - பெண் பிள்ளைகள்.

11. மொய் ஆர் - வண்டுகள் நிறைந்த. முகேர் - கையால் நீரைக் குடையும் போது உண்டாகும் ஓர் ஒலிக் குறிப்பு. கழல் - இங்குச் சிவ சத்தி. வழி - பரம்பரை. செய்யா - செந்நிறமுடையவனே. மருங்குல் - இடை. மை - அஞ்சனம். ஐயா - தலைவனே; அழகனே எனினுமாம். உயிர்களைப் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும் அருளுதல் இறைவனுக்கு எளிமையான ஒரு விளையாட்டு என்பார், 'விளையாட்டின்' என்றார். உய்யும்வகை - படிப்படியாய்ச் சிவத்தொண்டு முதலிய தவநெறிகளின் மேற்செல்லுதல். எய்யாமல் - இளைக்காமல்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
    தீர்த்தன் ;நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் ; இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
    காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
    ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
    ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய் !

Lord of the sacred stream, where we, that thronging mortal woes
  may cease, acclaiming bathe! Dancer in Tillai's sacred court
'Midst waving fire! This heaven, this flowery earth, us all
  in sport Thou guardest, formest, dost enshroud ;—
Thou say'st the word! Bracelets tinkling, jewels rattling
  with a merry sound, tuneful beetles humming round our locks adorned,
Plunge in the tank, where flowers are glistening ;
  praise the Master's golden Foot,
  and in the fountain bathe!—Our Lady fair, arise! 12

---

12. ஆர்த்த - (நம்மை அநாதியே) பிணித்த. ஆர்த்து - ஆரவாரித்து. ஆடும் - முழுகும். தீர்த்தன் - பரிசுத்தன். தில்லை - சிதம்பரம். சிற்றம்பலம் - நுண்ணிய ஞானப்பரவெளி. வான் - விண்ணுலகம். குவலயம் - நிலவுலகம். எல்லோமும் - (நம்) எல்லோரையும். கரந்தும் - மறைத்தும். விளையாடி - விளையாடுபவனே ! வார்த்தை - புகழ்ச்சொற்கள். வளை - கை வளையல். கலை - மேகலை ; ஆர்ப்பரவம் - மிக்க ஒலி. குழல் - கூந்தல். குடைந்து - மூழ்கி. உடையான் - ஆன்மாக்களை அடிமையாகவுடைய அல்லது எல்லாப் பொருளுமுடைய இறைவன். இருஞ்சுனை நீர் - பெரிய (மலைச்) சுனை நீர். பெண்கள் பலர் ஆடுதற்கு அகன்ற சுனை என்பதைக் குறிக்க 'இருஞ்சுனை நீர்' என்றார் ; இது மலையிலும் மலை அடிவாரத்திலும் உள்ள நீர்நிலையினைக் குறிக்கும். ஆடு - ஆடுக ; கடைக்குறை.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
 அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினுல்
 எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
 சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
 பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்!

There burn dark crimson flowers of Kuvalai, here the red lotus blooms
 there the bright race of small birds utters songs;
Here those who wash away their sin gathered round!
 This swelling tank is like our Queen and King!
We ent'ring plunge and plunge again, our shells resound;
 our anklets tinkling sound; our bosoms throb with joy;
The wave we plunge in swells. Plunge in the lotus crowned flood
 and joyful bathe!—Our Lady fair, arise! 13

---

13. 'பைங்குவளை......போன்றிசைந்த' - இவ்வடிகள் இறைவனையும் இறைவியையும் சிலேடைவகையால் குறிப்பனவாகும். பைங்குவளைக் கார்மலர் - பசிய கருங்குவளைமலர்; அருள் நிறைந்த நீலமேனியளாகிய உமை. செங்கமலப் பைம்போது - அழகிய செந்தாமரை மலர்; தீ வண்ணனுகிய சிவன். அம் கம் குருகு இனம் - அழகிய நீர் வாழ் பறவைக் கூட்டங்கள்; (கம்-நீர்.) அங்கம் குருகு இனம் - கையில் வளையல் தொகுதியினையுடைய உமை. (அங்கம் - உறுப்பு: கை. குருகு - வளையல்) பின்னும் அரவம் - மேன் மேலும் உண்டாகும் ஓசை; பின்னிக் கிடக்கின்ற பாம்புகளை யுடைய சிவன். (அரவம் - ஓசை, பாம்பு.) தங்கண் - (மடு நீராகிய) தம்மிடத்து. மலம் கழுவுவார் - அழுக்கைப் போக்குவார். தங்கண் மலங்கழுவுவார் - தம்மிடம் பொருந்திய ஆணவம் முதலிய பாசப்பிணிப்பைப் போக்குவார். பொங்கு மடு - நீர் நிறைந்த பொய்கை. சங்கம் - சங்கு, வளையல்கள். சிலம்ப - ஒலிக்க. பொங்க - குலுங்க, மேலெழ. பங்கயப் பூ - இது விடியற்காலத்தைக் குறிப்பது. இங்கு இறைவியும், இறைவனும் இயைந்ததுபோல் காணப்படும் பொய்கை

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

While ear-drops swing; while golden jewels wave;
While flow'ry locks are dancing; swarms of wing'd things flit;
Bathe in the cool flood, sing the sacred court!
sing th mystic Vedas, sing their inner sense!
Sing glory of the Light, sing Him the cassia-wreath Who wears;
Sing ye the power of Him, the First, sing Him the Last!
Sing ye the glory of Her Foot, Who armlets wears,
Whose guardian care we own!—Our Lady fair, arise! 14

என்க. மெய்யருளாம் தாயுடன் சென்று தந்தையை அடையவேண்டும் என்னும் முறைமைபற்றி "எங்கள் பிராட்டி" என அம்மையை முற் கூறியதாகும்.

14. குழை - காதணி. கலன் - அணி. கோதை - பூமாலை. சீதப் புனல் - குளிர்ந்தநீர். வேதப் பொருள் - சிவபெருமான். அப்பொருள் ஆமா(று) பாடி - (இறைவன்) அகரப்பொருளாய் இருப்பதைப் பாடி; அந்த வேதப்பொருளாகும் வகையைப் பாடி. தார்-மாலை. ஆதி திறம் - (எப்பொருட்கும்) முதலான தன்மை. திறம் - வழிபடும் உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்பக் கொள்ளும் திருமேனியின் வகை. அந்தம் - (எவற் றிற்கும்) ஈறான தன்மை. பேதித்து - (கன்ம நுகர்ச்சியில் ஈடு படாத வாறு) வேறுபடுத்தி. பெய்வளை - உமாதேவியார்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
  சீரொருகால் வாயோவாள் ; சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
  பாரொருகால் வந்தனையாள்;விண்ணோரைத் தான்பணியாள்;
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
  ஆரொருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் ! வாயார நாம்பாடி
  ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் !

Once a *time*, ‘ our Peruman,’ full oft cried she.*
  His glory any *time* to speak she ceased not
With gladsome mind, while tears in ceaseless stream
flowed forth.
  Once a *time*, this woman came to earth, nor bowed
Before the heavenly ones,—by the great King with
frenzy filled.
  Who like to her ? Of this mysterious One,
O lovely damsels, sing the Foot, and bathing plunge
  beneath the flow'ry flood !—Our Lady fair, arise ! 15

---

* The word ‘time’ is *Kal*, so there is a play on the word Karaikkal. It may be that the poet in another passage alludes to her beautiful prayer (XI, verse 8):—

‘ He gave me grace, tho’ I all else forget, ne’er to forget
His foot, Whose mighty dance we sing !.........’.

15. ஓரொருகால் - காலை, நடுப்பகல், மாலை, நள்ளிரவு முதலிய ஒவ்வொரு காலத்திலும். வாய் ஓவாள் - வாய் ஓயாமல் பேசுவாள். ஓவா - இடைவிடாமல். தாரை - நீர்த்துளி. பனித்தல் - இடைவிடாது துளித்தல். பார் ஒருகால் வந்தனையாள் - பூமியில் ஒரேமுறையாக விழுந்து வணக்கத்தை மேற்கொள்ளுவாள். பேர் அரையற்கு - பெரிய அரசனாகிய சிவபெருமான் பொருட்டு. பித்து - (அன்பால்) மயக்கம். வித்தகர் - ஞானவுருவினர். தாள் - இங்குச் சிவசத்தி. வார் - கச்சு. ஏர் - எழுச்சி ; அழகுமாம்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து)எம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் !

The cloud * an Allegory

Erewhile thou didst the sea diminish, rising like the Queen;
didst glisten like Her slender waist Who rules my soul;
Didst like the golden anklets sound that on Her sacred foot
in beauty gleam; didst bend like to Her sacred brow'
The bow. As she, mindful of those who love our King,
who like herself, our Mistress, never quit His side;
Mindful of us too, as our Queen, pours forth sweet grace,
even so pour down, O cloud! our Lady fair, arise! 16

---

* Here there is subtle comparison between Sivan, Sathi and a cloud that in the monsoon season rises from the sea. The cloud drinks the waters of the sea, gleams in the sky with lightning fires, sends forth the voice of the thunder, is sometimes made beautiful with a rainbow, and then, spreading itself over the heavens, pours down fertilising showers on all the earth below. So Sivan drank the poison from the sea; dances in Chidambaram while His golden ankets sound; wears a form of dazzling splendour; is renowned for the victories He gained with His bow; and pours forth blessings over all the earth. The comparison to Uma or Satti is obvious. This resembles III 66–94.

16. இச் செய்யுள் உமாதேவியாரின் கருணையைப்போல நாடு செழிக்க மழை பெய்கின்றது என்பதைக் காட்டுகின்றது. முன்னிக்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
  எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி! நந்தம்மைக் கோதாட்டி
  இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
  அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
  பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

The red-eyed one[1], and He Whose face turns to each point[2],
  and Gods in every heaven, taste no delight like ours.
Thou of the fragrant locks didst make our beings pure ;
  and here in grace didst rise in every home of ours ;
The Warrior gave in grace His golden lotus feet ;
  the King of beauteous eye ; Ambrosia rare to us His slaves ;
Our Peruman ! Singing His gift, plunge we and bathe
  in the clear lotus-flood !—Our Lady fair, arise ! 17

---

1. Vishnu. 2. Brahma, the 'four-faced'.

கடலை - முனைந்து கடல்நீரை. சுருக்கி - வற்றச்செய்து. உடையாள் என்ன - எம்மை யுடைய உமையம்மையின் திருமேனி நிறம்போல. இட்டிடையின் - மிகச் சிறிய இடையைப்போல. (இடுகு + இடை = இட்டிடை) பொன்னஞ் சிலம்பு-பொன்னலாகிய சிலம்பு. சிலம்பி - ஒலித்து. சிலை குலவி - வானவில்லை வீசி. முன்னி - முற்பட்டு ; விரும்பியுமாம். பொழியாய் - பொழிவாயாக. மழை - மேகமே ; இங்குப் பாவை நோன்பின் பொதுப்பயனாகிய மழைவளங் குறிக்கப்பட்டுள்ளது.

17. செங்கண் அவன் - திருமால். கொங்கு உண் - மணம் பொருந்திய. குழலி - பெண்ணே. நம் தம்மை - நம்மை. கோதாட்டி - (வினை மாசு)களைந்து ; சீராட்டியுமாம். பொற்பாதம் - இங்குச் சிவசத்தி. சேவகன் - வீரன் ; அண்ணல். ஆர் அமுது - கிடைத்தற்கரிய அமுது ; நிறைந்த அமுதுமாம். நலம் - நன்மை.

அண்ணு மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

Annamalai His form, His lotus foot heaven's host
adored, while lustre of their jewell'd crowns grew dim;
So when the bright-eyed sun the darkness drives away,
the cool moon's rays are paled, the stars themselves
depart.
Thus stood He forth; was Female, Male, was Neither-one;
was Heaven with gleaming lights, was Earth, was
all the rest.
Ambrosia manifest! Praising His jewell'd foot O Maid
plunge in this flowery stream!—Our Lady fair, arise! 18

---

18. அண்ணுமலையான் - திருமாலும் பிரமனும் அணுகமுடியாத அல்லது அறியமுடியாத மலைவடிவுடையவர் அண்ணுமலையார். அடிக்கமலம் - திருவடித் தாமரை; வீறு அற்றாற்போல் - ஒளி இழந்தாற்போல. கண் ஆர் இரவி - எங்கணும் பரவிய சூரியன். கார்கரப்ப - இருள் நீங்க. தாரகைகள் - நட்சத்திரங்கள். இறைவன் சத்தியாய்ச் சிவமாய் விளங்குதல் பற்றி, "பெண்ணாகி ஆணாய்" எனவும், பிரமமாய் நிற்றல் பற்றி "அலியாய்" எனவும் கூறினார் என்க. பிறங்கு - விளங்கும். இத்தனையும் - இத்துணைப் பொருள்களினின்றும். கண் - அறிவு. கண்ணார் அமுதம் - அறிவில் நிறைந்த அமுதம் கழல் - இங்குச் சிவசத்தி. இங்கு, 'பெண்ணே' என ஒருத்தியை விளித்ததாயினும் எல்லாப் பெண்களையும் சுட்டியதாகக் கொள்ளல் வேண்டும்.

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போங்கேள்!
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்(கு)?ஏலோர் எம்பாவாய்!

The Maidens' Vow

'The children of Thy hand are we; our Refuge Thou'—
thus that old word we say anew; in this our dread
Our Lord, to Thee one prayer we make; vouchsafe to hear!
'let none but Thine own lovers true our forms embrace;—
Our hands no service pay save to Thyself alone;—
our eyes,—by night, by day,—let them see nought but Thee!'
Our King, if here this boon Thou grant, to us the sun
in perfect beauty shines!—Our Lady fair, arise! 19

---

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் - இப்பழமொழி முற்காலத்தில் திருமணக் காலத்தில் பெற்றோர் தம் மணமகளை மணமகன் பால் அளிக்குங்காலத்தில் கூறும் சொல்லாகும் என்பர். உன்கை-உங்கை. அங்கு - இது திருமண நிகழ்ச்சியைக் குறிக்கும்; அசையுமாம். அப்பழஞ் சொல் - அந்தப்பழமொழி. புதுக்கும் - புதுப்பிக்கும். கங்குல் - இரவு. ஞாயிறு எங்கு எழில் என் - சூரியன் எத்திசையில் எழுந்தாலும் நமக்கு வரக்கடவது என்ன? இச் செய்யுளில் கன்னிப்பெண்கள் இம்மைப் பயனை "எம் கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க" என்பதனாலும், மறுமைப் பயனை "எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க" என்பதனாலும், வீட்டின்பத்தை, "கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க" என்பதனாலும் வேண்டினர் என்பதாம் (பண்டித மணி). இது பாவை நோன்பின் சிறப்புப் பயனைக் குறிப்பிட்டதாகும்.

போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்
　　போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி!எல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
　　போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி!எல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
　　போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றி!யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
　　போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்!

Be gracious Thou! to Thy foot's flower be praise!
　be gracious! To Thy rosy beauteous feet be praise!
The golden feet, the source of all that live, be praised!
　The flow'ry feet, the bliss of every life, be praised!
The twain feet, Goal and End of every life, be praised!
　The lotus-flower, unseen by Mal and the Four-faced, be praised!
The golden flowers, that saving made us His, be praised!
　In Margari-month we bathing praise!—Our Lady fair, arise! 20

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை—ஆங்கிலம்

முற்றிற்று

---

20. ஆதி முதன்மை. அந்தம் - முடிவிடம், தோற்றம் - பிறப்பிடம். போகம் - பாதுகாப்பு, ஈறும் - ஒடுங்குமிடம். இங்கு இறைவனின் ஐந்தொழிலும் கூறப்பட்டுள்ளமை அறிக. புண்டரீகம் - தாமரை. அருளல் - கட்டொழிந்து வீடு பெறச் செய்தல். இறைவன் திருவடிகள், "சிந்திப்பவர்க்குச் செந்தேன், முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன" என வரும் அப்பர் தேவார அடியின்படி உயிர்களுக்குப் போக மோட்சங்களை அருளும் தன்மையனவாம். இங்கே செந்தேன் என்றது போகத்தையும், முந்திப் பொழிவன என்பது முத்தியளித்தலையும் குறிப்பிக்கும். மார்கழி நீராடல் - பாவைநோன்பு.

உ

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

திருப்பள்ளியெழுச்சி*

திருப்பெருந்துறையில் அருளியது

[திரோதான சுத்தி]**

திருச்சிற்றம்பலம்

போற்றி !என் வாழ்முதல் ஆகிய பொருளே !
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்(டு)
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம் ;
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே !
ஏற்றுயர் கொடியுடை யாய் !எனை உடையாய் !
எம்பெரு மான் !பள்ளி எழுந்தரு ளாயே !

---

* இஃது இறைவனைப் பள்ளி எழுந்தருளுமாறு வேண்டிக்கொள்ளுதல் "எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என்ற அடி இதன் கருத்தை விளக்கி நிற்கும்.

** இது வைகறையில் இருள் நீங்க ஒளி எழுவதுபோல் ஆன்மாக்களுடைய திரோதானமலம் நீங்க ஞானவொளி உதயமாகின்ற முறையினை விளக்குவது.

1. வாழ்முதல் - வாழ்விற்கு அடிப்படை. புலர்ந்தது - (பொழுது) விடிந்தது. ஏற்றி - தூவி. அருள் மலரும் - அருள் விளங்கும். எழில் - அழகு. நகை – சிரிப்பு. தொழுகோம் - வணங்குவோம். சேற்று வயல் எனக்கூட்டுக. திருப்பெருந்துறை - இது 'ஆளுடையார் கோவில்' என வழங்கும். இங்கு இறைவன் வாதவூரரை ஆட்கொண்டருளினமையால் இப்பெயர் பெற்றது. இத்தலம் தற்போது 'ஆவுடையார் கோவில்' என வழங்குகிறது. இஃது அறந்தாங்கிக்குத் தென்கிழக்கில் சுமார் ஏழு மைலில் உள்ளது. ஏறு - இடபம். எனை உடையாய் - அடியேனை அநாதியாகவே ஆளாக உடையவனே. பள்ளி - படுக்கை ; துயில். எம்பெருமான் - எமது தலைவன்.

MORNING HYMN IN THE TEMPLE

or

THE ROUSING FROM THE SACRED COUCH[1]

[THE FREEDOM OF THE UPLIFTED SOUL]

Hail! Being, Source to me of all life's joys! 'Tis dawn;
upon Thy flower-like feet twin wreaths of blooms we lay,
And worship, 'neath the beauteous smile of grace benign
that from Thy sacred face beams on us. Siva—Lord,
Who dwell'st in Perun-turrai[2] girt with cool rice-fields,
where 'mid the fertile soil th' expanding lotus blooms!
Thou on Whose lifted banner is the Bull[3]! Master!
Our mighty Lord! from off Thy couch in grace arise! 1

---

1. The image of the God is laid upon a couch each evening, and taken up in the morning. This *reveille* is the first business of the day. This seems strangely at variance with ver. 5.

2. This was composed in Perun-turrai, 'the great harbour,' where the poet went to buy horses for his King and was made a disciple.

3. The bull is Sivan's emblem. He rides on a white bull. It is also on his banner (XIX. 40). The Bull-headed *Nandi*, whose image is everywhere in South India, is his Lord High Chamberlain.

அருணன்இந் திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலர,மற் றண்ணல்அங் கண்ணும்
திரணிரை அறுபதம் முரல்வன; இவையோர்;
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
அருணிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே!பள்ளி எழுந்தரு ளாயே!

The sun has neared the eastern bound;[1] darkness departs;
dawn broadens out; and, like that sun, the tenderness
Of Thy blest face's flower uprising shines; and so,
while bourgeons forth the fragrant flower of Thine
eyes' beam,
Round the King's dwelling fair hum myriad swarms of bees.[2]
See, Siva-Lord, in Perun-turrai's hallowed shrine
Who dwell'st!
Mountain of bliss, treasures of grace Who com'st to yield!
O surging Sea! from off Thy couch in grace arise! 2

---

1. The original says, 'Indra's region,' since he is regent of the East. There are eight points of the compass. Over each a deity presides.

2. This passage is a curious *double entendre*. It may also be rendered 'the vast assembled host sing the six syllables': Om-ci-va-ya-na-mah. The bees, or winged beetles, are called by metonomy 'six-feets.'

2. அருணன் - செங்கதிரவன்; சூரியன் சாரதியுமாம். இந்திரன் திசை - கிழ்த்திசை. இருள் - இரவின் இருள். உதயத்தில் திருமுகத்திலே அருட்கதிரவன் தோன்ற அன்பர்களது கண்களாகிய மலர் மலரும் என்பதாம். உதயம் - உதயவொளி. அகன்றது - பரவியது. கடிமலர் -

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி;ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய்! எமக் கெளியாய்!
எம்பெரு மான் !பள்ளி எழுந்தரு ளாயே!

The tender Kuyil's[1] note is heard; the cocks have crowed;
the little birds sing out; sound loud the tuneful shells[2];
Starlights have paled; day's lights upon the eastern hill
are mustering. In favouring love O show to us
The twin feet, anklet-decked[3], divinely bright;—
Siva-Lord, in Perun-turrai's hallowed shrine Who dwell'st!
Thee all find hard to know; easy to us Thine own!
Our mighty Lord! from off Thy couch in grace, arise! 3

---

1. The Koil or Kuyil, for which there is no English name.
2. The Sankha, or conch-shell, used in the temple music.
3. Worn especially by Kings and heroes.

மணமுள்ள மலர். நிரை - வரிசை. அறுபதம் - வண்டு. இவை - இவற்றை. ஓர் - கருதுக. ஆனந்தமலை - இன்பமலை. எல்லாப் பொருளும் அலைபோல் தோன்றி அடங்குதற்குரிய கடல்போல் இறைவன் விளங்குதலால் "அலைகடலே" என்றார்.

3. பூங்குயில் - அழகிய குயில்கள். குருகுகள் - பறவைகள். சங்கம் - சங்குகள். தாரகை - நட்சத்திரம். ஓவின - ஒழிந்தன. ஒருப்படுகின்றது - தோற்றுகின்றது. தேவ - தேவனே. கழல் - வீரக்கழல். நல்தாள் - பிறவியறுத்து வீடளிக்கும் நல்ல திருவடிகள். இணை - இரண்டு. யாவரும் அறிவரியாய் - சிவஞானம் கைவரப் பெற்றவர்களல்லாத பிறரால் அறியமுடியாத நிலையுடையவனே. எமக்கு - பெருங்கருணையால் அடியராகிய எமக்கு. விடியற்காலத்தில் குயில், கோழி, குருகுகள் கூவுதலும் சங்கு ஒலித்தலும் மரபு.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
    இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
    தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
    திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்(டு) இன்னருள் புரியும்
    எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

There stand the players on the sweet-voiced lute and lyre;
  there those that utter praises with the Vedic chaunt;
There those whose hands bear wreaths of flowers entwined;
  there those that bend, that weep, in ecstasy that faint;
There those that clasp above their heads adoring hands;—
  Siva-Lord, in Perun-turrai's hallowed shrine Who dwell'st!
Me too make Thou Thine own, on me sweet grace bestow!
  Our mighty Lord! from off Thy couch in grace arise! 4

---

4. இன்னிசை - இனிய ஓசையை இசைக்கும். வீணை, யாழ் - இவை இசைக்கருவிகள்; வீணையும் யாழும் தம்முள் சிறு சிறு வேறுபாடுடையன. இருக்கு - ருக்வேத மந்திரம். தோத்திரம் - துதிப்பாடல்கள். இயம்பினர் - ஓதுகின்றவர்கள். பிணைமலர் - நெருக்கிக் கட்டப்பட்ட மலராகிய மாலை. துவள்கை - சிவானந்தமேலீட்டால் துவளுதல்; அசைதல். தொழுகை - வணக்கம். அஞ்சலி - கைகுவிந்த வணக்கம். என்னையும் - (தகுதியற்ற) அடியேனையும். இன் அருள் - இனிய பேரருள்.

"பூதங்க டோறுநின் ருய்" எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னு!
சிந்தனைக் கும்அரி யாய்! எங்கண் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே!

'Thou dwell'st in all the elements,' 'tis said; and yet
'Thou goest not, nor com'st:' the sages thus have sung
Their rhythmic songs. Though neither have we heard nor learnt
of those that Thee by seeing of the eye have known.
Thou King of Perun-turrai, girt with cool rice-fields,
to ponder Thee is hard to human thought. To us
In presence come! Cut off our ills! In mercy make us Thine!
Our mighty Lord! from off Thy couch in grace arise! 5

---

5. பூதங்கள் - ஐம்பூதம் அல்லது எல்லாப் பொருள்கள். போக்கு வரவு - இறப்பும் பிறப்பும். இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் ஆதலின், "போக்கிலன் வரவிலன்" என்றார். புலவோர் - அறிஞர். கீதங்கள் - இசைப்பாடல்கள். ஆடுதல் - ஆனந்தக் கூத்தாடுதல். கேட்டு அறியோம் - கேட்டறியவில்லை. சீதம் - குளிர்ச்சி. மன்னு - அரசே. சிந்தனைக்கும் அரியாய் - சிந்தித்து அறிவதற்கும் அருமையானவனே. ஏதங்கள் - குற்றங்கள்; இவை பாசங்கள், மலங்கள், காமம், மயக்கம், வெகுளி என்ற முக்குற்றங்கள் என்பனவற்றைக் குறிக்கும்.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
    பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
    வணங்குகின் றார்,அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
    திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
    எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே!

Thy saints, who sinless in Thy home abide and know,
  have come, their bonds cast off; and now, a mighty host,
With beauteous garlands decked, and clothed in human shape,
  they all adore thee, Bridegroom of the Goddess dread!
Siva-Lord, Who dwell'st in Perun-turrai's hallow'd shrine,
  girt with cool rice-fields, where th' empurpled lotus blooms!
Cut off this 'birth', make us Thine own, bestow Thy grace!
  Our mighty Lord! from off Thy couch in grace arise! 6

6, பப்பு - பரப்பு; இடைக்குறை. பப்பு அற-மன விரிவு ஒழிய. வீடு - பற்றற்ற நிலை. உணரும் - மெய்யுணரும். பந்தனை - பாசநீக்கம். மைப்பு உறு கண்ணியர் - கருமையுற்ற கண்ணினையுடையார்; அன்புநீர் பெருக்கும் தலைவியர். மை - நீர். மானிடத்து இயல்பு - மனித இயற்கை. மனித வாழ்க்கையில் தலைவியர் தலைவரிடம் காதல்கொண்டு வழிபடுவது ஒப்ப என்ற பொருளில் அமைத்தலும் ஆகும். அணங்கு - உமாதேவியார். செப்பு உறு - புகழ்ந்து சொல்லப்பட்ட. செப்பு - செம்மை; சிவப்பு. இப்பிறப்பு - எடுத்த பிறப்பு. அறுத்தல் - நீக்குதல்.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்;
இதுஅவன் திருவுரு, இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கைஉள் ளாய்!திருப் பெருந்துறை மன்னா!
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்;
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே!

'The flavour of the fruit is that;' 'ambrosia that;'
'that's hard;' 'this easy;' thus Immortals too know not!
'This is His sacred form; this is Himself;' that we
may say and know, make us Thine own; in grace arise!
In Uttarakosamangai's[1] sweet perfumed groves
Thou dwell'st! O King of Purun-turrai's hallowed shrine!
What service Thou demandest, Lo! we willing pay.
Our mighty Lord! from off Thy couch in grace arise. 7

1. Uttarakosamangai, an ancient Pandiyan capital eight miles south-west of Ramnad.

7. அது - பரம்பொருளைக் குறிக்கும். இறைவன் உலகத்தில் கலந்துள்ளான் என்பதைப் "பழத்தின் சுவை" என்றார். என - போலும். அமரர் - தேவர். அமரரும், உம்: உயர்வு சிறப்பு உம்மை. அவன் திருவுரு இது - வீடருளும் பரம்பொருளின் திருவடிவம் இதுவாம். இவன் அவன் - இவனே அப்பெருமான். மது - தேன். திருவுத்தர கோசமங்கை-இஃது இராமநாதபுரத்தருகில் உள்ள சிவத்தலம்; எமைப் பணிகொள்ளும் ஆறு எது, அது கேட்போம் எனக் கூட்டுக. எது - எதுவோ.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
    மூவரும் அறிகிலர், யாவர்மற்று அறிவார்?
பந்தணை விரலியும், நீயும்நின் அடியார்
    பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
    திருப்பெருந் துறைஉறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
    ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே!

Before all being First, the Midst, the Last art Thou,
  The Three[1] know not Thy nature; how should others know?
Thou, with Thy tender Spouse, Thy servants' lowly huts
  in grace didst visit, entering each, Supernal One!
Like ruddy fire Thou once didst show Thy sacred form;
  didst show me Perun-turrai's temple, where Thou dwell'st;
As Anthanan didst show Thyself, and make me Thine.
  Ambrosia rare! from off Thy couch in grace arise! 8

---

1 i.e. Indra, Brahma and Vishnu.

8. முந்திய - எல்லாவற்றிற்கும் முற்பட்ட. முதல் நடு இறுதி - ஆதியும் நடுவும் அந்தமும். மூவர் - மும்மூர்த்திகள்; பிரமன், திருமால், இந்திரன் என்ற மூவருமாம். பந்தணை விரலியும் - பந்துக்கள் வந்து சாருகின்ற விரலினையுடைய உமாதேவியாரும்: திருவருட்சத்தியும். "பந்துசேர் விரலாள்" என்பது தேவாரம். பழங்குடில் - பழங்குடிசையாகிய உடம்பு. புரை - ஒத்த. உறை - தங்குகின்ற. அந்தணன்

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே!கரும் பே!விரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குஉயி ராஞய்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே!

The gods in heaven who dwell may not approach Thy seat!
O Being worthiest! Yet us who at Thy foot
Pay homage, Thou to earth descending, madest blest,
Dweller in fertile Perun-turrai's shrine! our eyes
Beheld Thee; honied sweetness made our being glad,
Ambrosia of the sea! Sweetest of sweets! Thou art
Within Thy longing servants' thought!—Soul of this world!—
Our mighty Lord! from off Thy couch in grace arise! 9

ஆவதும் - அருளாளனுய் வருதலேயும்; வேதிய வடிவத்தையும். ஆர் அமுது - நிறைந்த அமுதம் போன்றவன்; பரிபூரணன். ஆர் - கிடைத்தற்கு அருமையுமாம்.

9. விண்ணகம் - வானுலகம். நண்ணவும் மாட்டா - அடைய முடியாத. விழுப்பொருள் - மேலான பரம்பொருள். உன - உன்னுடைய. தொழுப்பு - தொழும்பு - தொண்டு. தொழுப்படியோங்கள் - தொண்டாற்றும் அடிமையாகிய யாங்கள். வண் - வளப்பம். வழியடியோம்- தொன்று தொட்டு வந்த தொண்டராகிய யாங்கள். கண்ணகத்தே நின்று களி தருதல்- கண்ணுட் பாவையாய் மகிழ்ச்சி விளைத்தல். கடல்- திருப்பாற்கடல். எண்ணகத்தாய் - எண்ணத்தில் உள்ளவனே. உலகு- உலகத்திலுள்ள உயிருக்கு.

" புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் ரேும்அவமே, இந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று " நோக்கித்
திருப்பெருந் துறைஉறை வாய்!திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும், மலரவன் ஆசைப்
படவும்,நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய் !
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே !

Said sacred Mal and flower-born Ayan as they gazed
on Sivan's form, ' This day in vain we spend and cry.
'Tis time we went to earth and there were born.
' Tis earth,
'tis earth alone where Sivan's grace is wont to save.'
Thou King, Who dwell'st in Perun-turrai's[1] hallow'd
shrine,
mighty Thou wert to enter earth, and make us Thine!
Thou and the Grace, that flower-like blooms from forth
Thy form,
Ambrosia rare! from off Thy couch in grace arise! 10

திருச்சிற்றம்பலம்

---

1. Perunturrai ('the great haven') was to the sage very much what Jerusalem, the Holy, was to the Hebrew Psalmists and Prophets; and what Jerusalem, the Golden, is to Christians now.

10. புவனி - பூமி. நாள் - வாழ்நாள். நாள் நாம் அவமே போக்குகின்ரேும் - ஆட்கொள்ளப். பெருமல் வாழ்நாளை வீணுகப் போக்குகின்ரேும். அவமே - வீணுக. அலரவன் - வெண்டாமரையில் உறையும் பிரமன். நின் அலர்ந்த மெய்க் கருணையும்-வீட்டினைத் தரும் தாயாகிய அருட்சத்தியையும். அவனி - பூமி. வல்லாய் - வல்லவனே.

உ

சிவசிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய தருமங்கள்

1.	திருமுறை வளர்ச்சிக்கு ஆக 26 தருமங்கள்	...	3,79,500
2.	கல்வி அபிவிருத்திக்கு ஆக 48 தருமங்கள்	...	5,92,200
3.	சைவசித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள்	...	1,56,000
4.	அன்னதானம் செய்ய 88 தருமங்கள்	...	19,76,500
5.	வைத்தியம் செய்ய 5 தருமங்கள்	...	1,22,500
6.	பொது தருமங்கள்-ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப்பரிசு, கல்லெழுத்து முதலிய 50 தருமங்கள்	...	4,89,745
	ஆகத் தருமங்கள் 224-க்கு	...	37,16,445

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—1101/56—3000.